Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 18/2021** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW32** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பில்லாணி |
| Father Name | : | முத்துராமு |
| Village | : | வாலாந்தரவை, |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கடையில் வேலை |
| Religion | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2025

(எதிரிகள் 1, 9 இறப்பு, எதிரிகள் 3, 7, 8, 14, 18, 19 ஆஜரில்லை, எதிரிகள் 3, 7, 8, 14, 18, 19 தரப்பில் BNSS-355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை:-**

நான் இராமநாதபுரம் தாலுகா, வாலாந்தரவை கிராமத்தில் வசித்து வருகிறேன். சிவகங்கையில் உள்ள ஒரு ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 விஜயை தெரியும். இறந்துபோன குண்டுமணி என்ற பூமிநாதன், விஜய் என்கிற 27 விஜய் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளையும், இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரிகளையும் தெரியும். உள்ளூர்க்காரர்கள். இறந்துபோன குண்டுமணி

என்ற பூமிநாதன், விஜய் என்கிற 27 விஜய் ஆகிய இருவரும் எங்கு வைத்து எப்போது, யாரால் கொலை செய்யப்பட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் சிவகங்கையில் இருந்தேன். மேற்படி பூமிநாதனும், விஜய் என்ற 27 விஜயும் எனக்கு அக்கா மகன்கள். அவர்கள் கொலை செய்யப்பட்ட விவரம் அறிந்து மறுநாள் ஊருக்கு வந்தேன். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து அவர்களது உடல்களை பார்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 20.05.2018 ம் தேதி போலயன் நகரில் செல்வம் என்பவர் குழந்தைகளுக்கு காதணிவிழா நடந்தது என்றும், அந்த விழாவிற்கு நானும் சென்றேன் என்றும் காதணி விழா முடித்துவிட்டு அன்று இரவு செல்வம் வீட்டிற்கு முன்பு போட்டிருந்த பந்தலை சுற்றி நான், சசிகுமார், ராஜேந்திரன், பஞ்சவர்ணம், விஜய் மற்றும் இந்த வழக்கில் இறந்துபோன 27 விஜய், குண்டுமணி என்ற பூமிநாதன் ஆகியோர்கள் தூங்கிக்கொண்டிருந்தோம் என்றும் செல்வத்தின் வீட்டிற்குள் பெண்கள் அனைவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்றும் நானும், என்னுடன் படுத்து தூங்கியவர்கள் லைட் வெளிச்சத்தில் தூக்கம் வராமல் புரண்டு படுத்துக் கொண்டிருந்தோம் என்றும் அன்று இரவு 09.30 மணியளவில் வழக்கின் எதிரிகளான கார்த்திக், தர்மா ஆகியோர்கள் கையில் ஆளுக்கொரு அருவாளும், மற்ற எதிரிகள் ஆளுக்கொரு அருவாளும் வைத்து நின்று கொண்டார்கள் என்றும் அப்போது எதிரி கார்த்திக், தர்மா ஆகியோர்கள் இவர்களை ஓடிவிடாமல் சுற்றி நின்று மறைத்து நின்றார்கள் என்றும் எதிரி கார்த்திக் குண்டுமணி எ ன்ற பூமிநாதனின் வலதுபக்க காதுக்கு மேல் வெட்டினார் என்றும் பூமிநாதன் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் எதிரி அருண் அருவாளால் 27 விஜயின் இடது ஆள்காட்டி விரல், கழுத்து ஆகிய இடங்களில் வெட்டி கொலை செய்து விட்டார் என்றும் எங்களுடன் உறங்கிக் கொண்டிருந்த விஜய் என்பவரை பெருங்குளம் முத்துமாரி என்பவர் அருவாளால் உச்சந்தலை, கழுத்து ஆகிய இடங்களில் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றும் அவர்கள் வெட்டுவரை பார்த்து நாங்கள் எல்லாம் கத்தினோம் என்றும் எங்கள் சத்தம் கேட்டு வீட்டிற்குள் தூக்கிக்கொண்டிருந்த முத்து லெட்சுமி, பிருந்தா, கோவிந்தம்மாள்,

சரண்யா ஆகியோர்கள் ஓடிவந்தார்கள் என்றும் நாங்கள் எல்லோரும் காயம்பட்டு கிடந்த விஜயை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் விசாரணையில் சொல்லியிட்டு தற்போது எதிரிகளும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.